# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.64/2022 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-2/PW- 2 | Village: திருவிடைமருதூர் |
| Name : முத்துக்குமார் | Age :46 |
| Father's/Husband's Name : பாலசுப்ரமணியன் | Taluk : திருவிடைமருதூர் |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.03.2026**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் திருவிடைமருதூர் மகாதான வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா1 எனது மனைவி. சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2020-ம் அன்று இரவு 08.30 மணியளவில் என் மனைவி எங்கள் வீட்டு வாசலில் முன்பு நின்று கொண்டிருந்தபோது யாரோ அவரை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும் அதில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும் அவரை பின்னால் இருந்து தள்ளியதாலும், அவர்

எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதாலும் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்று போன் மூலம் கடையில் இருந்த என்னிடம் கூறினார். கீழே விழுந்ததில் என் மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். மற்ற விவரங்கள் எதுவும் தெரியாது. நான் வேறு எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை கேள்வி படவும் இல்லை. அசா1 என் மனைவி ஆஜர் எதிரி மீது கொடுத்த புகார் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 22.03.2020 ம் தேதி காலை 8 மணியளவில் ஆஜர் எதிரி அபிராமி என் மனைவியை தகாத வார்த்தையால் திட்டி கொண்டிருந்தார் என்றும் என் மனைவி அவரிடம் ஏன் திட்டுகிறீர் என்று கேட்டதற்கு உன் கணவர் என்னை வைத்திருப்பதாக என் கணவரிடம் நீ சொன்னாய் என்று திட்டினார் என்றும் பிறகு மீண்டும் 23.03.2020 ம் தேதி இரவு 8.30 மணியளவில் மீண்டும் அபிராமி என் மனைவியிடம் என் கணவர் மணிவண்ணனிடம் எதற்கு பணம் கேட்கிறாய் என்று கூறி தேவடியா, குச்சிக்காரி என்று அசிங்கமாக திட்டி கீழே கிடந்த இரும்பு கம்பியால் என் மனைவியின் கையில் அடித்தார் என்றும் உடனே நானும் அக்கம் பக்கம் உள்ளவர்களும் ஓடி வந்து தடுத்தோம் என்றும் இது சம்மந்தமாக திருவிடைமருதூர் காவல்நிலையத்தில் என் மனைவி புகார் மனு கொடுத்துவிட்டு கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால்

சரியல்ல. மேற்கண்ட விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், எனக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.64/2022 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-1/PW-1 <br> Name : வனிதா <br> Father's/Husband's Name : முத்துக்குமார் <br><br> Nationality : Indian | Village: திருவிடைமருதூர் <br> Age :36 <br> Taluk : திருவிடைமருதூர் <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.03.2026**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் திருவிடைமருதூர் மகாதான வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர். சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2020-ம் அன்று இரவு 08.30 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது யாரோ என்னை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள்.அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். என்னை பின்னால் இருந்து தள்ளியதாலும், நான் எழுந்து திரும்பி

பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக திருவிடைமருதூர் காவல் நிலையம் சென்றேன். அங்கு போலிசாரிடம் இது சம்மந்மாக நடந்த விவரம் பற்றி கூறினேன். அவர்கள் எதோ எழுதினார்கள் என்ன எழுதினார்கள் என்று தெரியாது என்னிடம் படித்து காண்பிக்கவில்லை கையொப்பம் எதுவும் என்னிடம் வாங்கினார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 22.03.2020 ம் தேதி காலை 8 மணியளவில் ஆஜர் எதிரி அபிராமி என்னை தகாத வார்த்தையால் திட்டி கொண்டிருந்தார் என்றும் நான் அவரிடம் ஏன் திட்டுகிறீர் என்று கேட்டதற்கு உன் கணவர் என்னை வைத்திருப்பதாக என் கணவரிடம் சொன்னதாக திட்டினார் என்றும் பிறகு மீண்டும் 23.03.2020 ம் தேதி இரவு 8.30 மணியளவில் மீண்டும் அபிராமி என்னிடம் என் கணவரிடம் எதற்கு பணம் கேட்கிறாய் என்று கூறி தேவடியா, குச்சிக்காரி என்று அசிங்கமாக திட்டி கீழே கிடந்த இரும்பு கம்பியால் என் கையில் அடித்தார் என்றும் உடனே என் கணவரும் அக்கம் பக்கம் உள்ளவர்களும் ஓடி வந்து தடுத்தார்கள் என்றும் இது சம்மந்தமாக திருவிடைமருதூர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்துவிட்டு கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி

தெரிந்த நபர் என்பதாலும், எனக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**